# <u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>

**<u>அ.வ எண்: 231/2024 (பிசா 1) ஜெயபாலன் தேதி: 16.02.2026.</u>**

**<u>பிசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் முதல் விசாரணை தொடர்ச்சி:</u>**

நான் இந்த வழக்கில் 3 ம் பிரதிவாதி. நான் இன்று எங்கள் தரப்பில் 19 ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். அவை முறையே **பி.சா.ஆ.1** முதல் **பி.சா.ஆ.19** வரை குறீயிடு செய்யப்படுகிறது. (**பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 அவணங்களின் அசல் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் அந்த ஆவணங்களுக்கு உண்மை நகல் வழங்க சங்கத் தலைவர் மற்றும் செயலாளருக்கு சட்டப்படி உரிமை இல்லை என்றும், அதனால் மேற்படி ஆவணங்கள் சட்டப்படி ஏற்கதக்கவை அல்ல என்று கூறிய வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனைக்கு உட்பட்டு குறீயிடு செய்யப்படுகிறது, பி.சா.ஆ.7 மற்றும் பி.சா.ஆ.12 ஆவணங்கள் முழுமையான ஆவணங்கள் இல்லை என்றும், அதனால் அந்த ஆவணங்கள் ஏற்கதக்கவை அல்ல என்றும் கூறிய வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனைக்கு உட்பட்டு குறீயிடு செய்யப்படுகிறது**). நான் தாக்கல் செய்துள்ள மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு வாதிகளின் வழக்கை எங்களது செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய பிரார்த்திக்கிறேன்.

**<u>குறுக்கு விசாரணை:</u>**

(**5, 13, 18, 20, 22, 24, 29, 42, 45, 55, 59, 63, 11, 27, 29, 31, 36, 37, 44, 51, 53, 62, 65, 9, 10, 19, 25, 26, 30, 35, 48, 50, 52, 54, 60, 12, 14, 15, 17, 21, 28, 33, 34, 46, 47, 56, 58, 61, பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜராகி மேற்படி சாட்சியை பொருத்து தங்கள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்து அவ்வாறே பதிவு செய்யப்படுகிறது.**)

**<u>குறுக்கு விசாரணை:</u>**

67–ம் பிரதிவாதி மற்றும் வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.